


செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் இன்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற உள்ள சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழாவின் மாநாட்டின் முன்னேற்பாடு பணிகளை திராவிடர் கழகத் தலைவர் கீ.வீரமணி – குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், திராவிடர் கழக பொதுச்செயலாளர் வீ.அன்புராஜ், நகரச் செயலாளர்கள் ஜெ. சண்முகம், த.வினோத்குமார், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், கழக நிர்வாகிகள் – திராவிடர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (03.10.2025) துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 844 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என ”ஒருங்கிணைந்த வளாகம் கட்டுமான பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், துணை ஆணையாளர் (வருவாய்/நிதி) ம.பிரதிவிராஜ், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமை பொறியாளர் மகாவிஷ்ணு, மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன். ராஜன்பாபு, உள்ளாட்சித் பிரதிநிதிகள் எஸ்.முரளி, ரவிச்சந்திரன், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சுயமரியாதை இயக்கம் நூற்றாண்டு நிறைவு விழா – இன்று!

# மறைமலை நகர் மாநாடு - திருப்புமுனையாகும் - வாரீர்! வாரீர்!!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அழைப்பு!

சென்னை, அக் 04-

மறைமலை நகரில் இன்று (4.10.2025) நடைபெற உள்ள சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா மாநாடு - திருப்புமுனை மாநாடு - ‘திராவிட மாடல்’ இயக்கத் தலைவர்கள் பங்கேற்கின்றனர். அனைவரும் வாரீர் வாரீர் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



**தெற்கே தோன்றிய தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம்!**

தெற்கே தந்தை பெரியாரால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் - மத, ஜாதி, வர்ண, கல்வி பேதங்கள், பெண்ணடிமை ஒழித்து, மானுடத்தை சமத்துவப் புரியாக்கும் கொள்கைக்கு உரியது.

1925இல் தொடங்கப்பட்ட தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் வெளிப்படையான, பல கோடி மக்களின் மூளை விலங்கின் கொடிய தளையறுத்திடும் மனிதநேய இயக்கம்.

செப்டம்பர் 27 அன்று அதே ஆண்டு தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். என்ற முகமூடி இயக்கமோ உள்ளும் புறமும் வெவ்வேறு வேலைத் திட்டங்கள், உயர் ஜாதி நலன்களைக் காப்பாற்றிடவே தொண்டு முகத்திரை அணிந்து புறப்பட்ட இயக்கம்.

உயர் ஜாதி வெகுச் சிறுபான்மை எண்ணிக்கையினரின் ஜாதி இயக்கம் என்ற முத்திரை தன்மீது விழுந்து, குட்டு உடைவதை மறைக்க, ஹிந்து மதம் - அதன் உரிமைகள் என்ற பெயரில் சாவர்க்கர் போன்றவர்களின் அரசியல் ஆளுமைத் தத்துவமான ‘ஹிந்துத்துவா’ என்ற ஒரு ‘மயக்க பிஸ்கெட்டை’ மற்றவருக்குத் தந்தது. உடற்பயிற்சிக்கு ஷாகா என்ற போர்வையில் இளைஞர்களைச் சேர்ப்பது - பெற்றோர், ஏமாந்த இளைஞர்களை ஈர்க்க ஷாகா என்பதேகூட ஆரிய வடமொழி சமஸ்கிருத கலாச்சாரப் பரப்பே அதன் இலக்கு.

அதன் மூலம் சமூகத்தின் பழைய பாசி படர்ந்த வர்ணதர்மம், வேத, பேத, தர்மமாகவே காட்சியளிக்கப்பட்டது.

**மூன்று முறை தடை செய்யப்பட்ட இயக்கம் ஆர்.எஸ்.எஸ்.**

இந்தியாவில் மூன்று முறை தடை செய்யப்பட்ட இயக்கம் எப்படி இப்படி ஒன்றிய ஆட்சியைக் கைப்பற்றியது? எந்த அரசியலமைப்புச் சட்டப்படி பதவிப் பிரமாணம் எடுத்தார்களோ அதற்கு நேர்மாறாக தானடித்த மூப்பாக உள்ளிருந்து புத்தகத்தை அரித்துத் தின்னும் ‘கறையான்களாகி’, இன்று மாற்றப்பட முடியாத அரசியலமைப்புச் சட்டத்தின் அடிக்கட்டுமானப் பீடிகையின் தத்துவங்களைத் தவிடு பொடியாகும் உச்சகட்டம் இது!

‘விஜயதசமி’ நாள் - அப்படி ஒரு வடமொழிச் சொல் - முன்பே ‘ஆரியர் அடைந்த வெற்றி நாள்’ என்பதைக் குறிக்கும். ஒரு கற்பனைப் பண்டிகையை (பின்னால் உருவாக்கப்பட்ட) அறிவித்துத் தங்கள் கொள்கைத் திட்டங்களை நிறைவேற்றிட, முதலில் பண்பாட்டுப் படையெடுப்பு என்ற மறைமுக ஆயுதத்தைக் கையில் எடுத்தனர்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற திராவிடப் பண்பாட்டுக்கு எதிராகவே அது பிறந்தது. பல ஆய்வாளர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். 1916இல் தென்னாட்டில் பிறந்த பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் - நீதிக்கட்சி என்ற திராவிடர் இயக்கத்தின் எதிர் வினையாகவே வழமையான முகத்திரை அணிந்து ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் ஆரியர் நலன் காப்பதற்குப் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டனர். எதிர்த்தும் அணைத்தும் உதிரிகள் மூலமும், அப்பாவி இளைஞர்களுக்கு 2 கோடி வேலை வாய்ப்பு என்றும், வறுமையில் வாடும் ஏழைகளுக்கு ரூ.15 லட்சம் வங்கிக் கணக்கில் என்பது போன்ற வாக்குறுதி ஜூம்லாக்கள் போன்ற பொய் ஆசை வார்த்தைகளை, சூழ்ச்சிப் பொறிகள், அதிகாரத்தைத் தன் வயப்படுத்தி, வஞ்சித்து ஜாதி, மத போதை, கோயில், பக்தி விழா, ‘மயக்க மாத்திரைகள்’மூலம் ஏமாற்றி வருகின்றனர். மதச்சார்பின்மை, ஜனநாயகத்திற்கு மாறாக கட்சி வாக்கு வன்முறை, ரகசிய நடப்புகளால் தானே மூன்றுமுறை தடை செய்யப்பட்டது.

**அணைத்து அழிக்கும் ஆபத்தான அணுகுமுறை கொண்டதுதான் ஆர்.எஸ்.எஸ்.!**

எதிர்த்தவர்களை அழித்தல், அது முடியாதபோது அணைத்து ஒழித்தல் மூலமே அன்று பவுத்தத்திலிருந்து இன்றைய அரசியல் கூட்டணி வரை ‘அடமான கட்சிகளை ஆட்கொள்ள, வார்த்தைகளாலும் வியூகங்கள், அதிகார மய்ய’ திரிசூலங்களாலும் தங்களை நிலைநிறுத்த, கொள்கையில் நியாயத்திற்காகப் போராடும் ஆட்சிகளின் குறிப்பாக திராவிட ஆட்சி போன்ற எதிர்க்கட்சிகள், ஆளுகின்ற மாநில ஆட்சிகளை வஞ்சித்தல் - மதக் கலவரங்கள் - எத்தனை மதக்கலவர விசாரணைக் கமிஷன்கள்! இப்படி பலப்பல!

ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பு அரசியலுக்குப் போகாத ஒரு கலாச்சார அமைப்பு என்று புளுகுவது ஒருபுறம்; அமைச்சர்கள் யார், எத்துறை அவர்களுக்கு என்று நிர்ணயிப்பது வரை பா.ஜ.க. என்ற அதன் அரசியல் கட்சிப் பிரிவுக்கு உத்தரவு போடுவது எல்லாமே ஆர்.எஸ்.எஸின் செப்படி வித்தைகளே!

உள்ளே, ஒருபுறம் மோகன் பாகவத் மூலம் - இப்போதும் ஆர்.எஸ்.எஸ். VS பிரதமர் மோடி என்ற பனிப்போர் அரசியல் வட்டாரங்களில் அடிக்கடி உலா வருவதும், அதன் ஆதிக்க வெறி வீழ்த்தப்படும் என்பதும், அத்வானிகளும், முரளி மனோகர் ஷோஷிகளும் ஓரங்கட்டப்பட்டதை எல்லாம் அரசியல் நோக்கர்கள் சொல்லவே செய்கிறார்கள்.

**பாசாங்குகளால் தமிழ் நாட்டை வீழ்த்த முடியாது**

ஆனாலும் பெரியார் மண்ணில் இன்னும் வெற்றிக்கொள்ள முடியவில்லை! திராவிட இயக்கம் என்ற பழுதில்லா விழுதுகளின் கொள்கையை வீழ்த்த இயலாத பாறைகளால் ஆனவை போன்ற உறுதியான கொள்கைகள்! தங்களது போலி ஏமாற்றுப் பாசாங்குகளால் வீழ்த்த முடியவில்லை - வெத்து வேட்டு வெடிகளால் வினையாற்றி, குறுக்கு வழியில் தமிழ் மண்ணில் தங்களது ஆரிய சாம்ராஜ்யக் கொடியினைப் பறக்கவிடலாம் என்பதற்காக மண் குதிரைகளை, பொய் குதிரை, ஜட்கா குதிரைகளை ‘திராவிட மாடல்’ ரேஸ் குதிரைக்குப் பந்தயம் கட்டிப் படங்காட்டி வெற்றி பெற நினைக்கும் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது!

இது பக்குவப்படுத்தப்பட்ட, பெரியாரின் சுயமரியாதை மண் - பண்பாட்டுப் படையெடுப்பைப் பல ஆண்டுகளுக்கு முன்பே தடுத்து வெற்றி பெற்ற திருமண்!

அதைப் பறைசாற்றுகின்ற நூற்றாண்டு காணும் திராவிட சுயமரியாதை இயக்கம் என்ற பெரியாரின் பேராயுதம்! அறிவாயுதம்! இரு பெரும் தத்துவப் போர் - ஆரிய - திராவிடப் போரின் புது வடிவமே இன்றைய களநிலவரத்தின் நிலை!

**திருப்புமுனை தரும் மறைமலை நகர் மாநாடு**

சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாடு - சிந்துவெளி முதல் கீழடி புதைச் சின்னங்கள் வரை என்ற பலமான பின்னணியே இதன் மூல வரலாறு! எளிதில் வென்று விடலாம் எனத் தப்புக் கணக்குப் போடுகின்றத் தருக்கர்களுக்குத் தக்கப்பாடம் கற்பிப்பதே நமது மறைமலை நகர் மாநாடு - ‘திராவிட மாடல்’ கட்சித் தலைவர்கள், முதலமைச்சர் பங்கேற்கக் காத்திருக்கிறார்கள் ஒரு திருப்புமுனையைத் தரும் நாளைய வரலாற்றுப் பதிவுகள்.

வாரீர்! வாரீர்!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் அழைப்பு விடுத்துள்ளார்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகராட்சி அலுவலகத்தில் கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றி கழகத்தின் அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த 02 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் தலா ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா ஆகியோர் உள்ளனர்.

### செங்கல்பட்டு மாவட்டம் – திருப்போரூர் – நெம்மேலி கிராமம்

# கடலில் மூழ்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 4–**

**செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், நெம்மேலி கிராமம், சூளேரி காட்டுக்குப்பம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவியையும் – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:–

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், நெம்மேலி கிராமம், சூளேரி காட்டுக்குப்பம் கடற்கரை பகுதியில் கடந்த 28.9.2025 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் சென்னை, பெரம்பூர் அகரம் பகுதியிலிருந்து மகேந்திரா வேன் மூலம் சுற்றுலா வந்த 17 நபர்களில் பெரம்பூர், சக்கரபாணி தோட்டத்தைச் சேர்ந்த வெங்கடேசன் (வயது 36) த/பெ.சந்திரன் என்பவர் எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தார். மேலும், அவரது இரண்டு மகள்கள் செல்வி. கார்த்திகா (வயது 17) மற்றும் செல்வி.துளசி (வயது 16) ஆகிய இருவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டு 30.9.2025 அன்று மேற்படி இருவரின் உடல்கள் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்ற துயரகரமானச் செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

### வலைதளங்களில் வலம் வரும் செய்தி!




### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# கொளத்தூர் பகுதியில் “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” 225வது நாள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி உணவு வழங்கினார்!

சென்னை, அக்.4-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் ஏற்பாட்டில் “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி, 75வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், 100வது நாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, 125வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன், 150வது நாள் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் அவர்களும், 175வது நாள் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களும், 200வது நாள் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்களும் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 225வது நாளான இன்று (02.10.2025), கொளத்தூர் கிழக்கு பகுதி, 70அவது வார்டு அயனாவரம், டிக்கா குளம் மசூதி அருகில் மற்றும் 70வது வார்டு, சுந்தர விநாயகர் கோவில், செம்பியம் காவல் நிலையம் அருகில் ஆகிய 2 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சட்டம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.

இச்சிறப்புமிக்க “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” திட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தினந்தோறும் 200 நாட்களுக்கும் மேல் 400க்கும் மேற்பட்ட இடங்களில் காலை 7.00 மணியளவில் கலந்து கொண்டு பசியாக வரும் பொது மக்களுக்கு, பசியாற காலை உணவு வழங்கிக் கொண்டிருக்கிறார்.

இச்சிறப்புமிக்க திட்டமானது பொதுமக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்று, அப்பகுதி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு காலை உணவு அருந்திவிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி வருகிறார்கள்.

“அன்னம் தரும் அமுதக் கரங்கள்” மாபெரும் திட்டமானது (02.10.2025) தற்பொழுது 225 நாள் கடந்து, 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரை தொடர்ச்சியாக துறைமுகம், வி.க நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் தொகுதிகள் என கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து தொகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடலின் செயல்களில் ஒன்றாக இத்திட்டம் நடத்துவதில் சென்னை கிழக்கு மாவட்டம் பெருமை கொள்கிறது.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா, பகுதி செயலாளர் ஐசிஎப். வ.முரளிதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.சந்துரு, மகேஷ்குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ஸ்ரீதணி, திருமதி.தாவுத்பீ, திருமதி. அமுதா பொன்னிவளவன், வட்டச் செயலாளர்கள் டி.சந்திரசேகர், பா.அன்பரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.